**தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு )**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள

ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக என்பதும் ஆகும்.

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை களுத்துறை சாரதிகள் பயிற்சிக் கல்லூரியிடமிருந்து ரூபா 10,921,893 ஆன தொகையொன்று வருட | இலங்கை போக்குவரத்துச் சபையின் களுத்துறை சாரதிகள் பயிற்சிக் கல்லூரியிடம் 2020.12.31 | பெற வேண்டிய மிகுதிகளை விரைவில் அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | காலத்திற்கும் மேலாக அறவிட வேண்டியதாகக் காணப்படுவதுடன் அத்தொகையை அறவிடுவதற்கு மருத்துவ நிறுவகத்தின் கவனம் கோரப்படவில்லை. | இல் பெற வேண்டிய தொகை ரூபா 10,921,893 ஆன தொகையொன்றாகும். இத்தொகை இரு பிரிவுகளாக உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அவை முறையே பாதுகாப்புக் கட்டணம், ரூபா 10,381,893.48 மற்றும் கட்டிட வாடகை ரூபா 540,000 ஆகும். 2016.09.07 இல் இலங்கை போக்குவரத்துச் சபையின் முன்னாள் தலைவரினால் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் பாதுகாப்புக் கட்டணத்தின் 1/5 பகுதியொன்று செலுத்தப்படுவதற்கு உடன்பட்டிருந்ததாக எழுத்து மூலம் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எமது நிறுவகத்தினால் முறையே 2018.10.25, 2019.09.20, 2020.11.25 மற்றும் 2021.11.27 ஆந் திகதிய கடிதங்கள் மூலம் இலங்கை மத்திய சாரதிகள் பயிற்சிக் கல்லூரிக்கு மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஆனால் இற்றை வரை எவ்வித எழுத்து மூலமான பதிலொன்று பெறப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1997 இன் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து | மருத்துவ நிறுவகச் சட்டத்திற்கு முரணாக 2020 ஆம் ஆண்டில் இலங்கை | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிறுவகச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மருத்துவ நிறுவகச் சட்டத்தின் 3(அ) பிரிவு | | போக்குவரத்து சபையின் மற்றும் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தின் ஊழியர்களுக்காக முறையே ரூபா 1,988,954 மற்றும் ரூபா 185,932 ஆன மருத்துவ வசதிகள் மற்றும் மருந்துகள் என்பன கடன் அடிப்படையின் கீழ் வழங்கப்பட்டிருந்தன. | | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1997 இன் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து நிறுவகச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | | | |
| | | i. | நிறுவகத்தினால் எந்தவொரு வகையான மோட்டார் வாகனங்கள் தொடர்பான விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் மருத்துவ சேவை மற்றும் உதவிகளை வழங்குதல். | தற்போது இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் தொடர்பாகச் செலுத்த வேண்டிய நட்டஈடு அல்லது நட்டப்பங்கு தொடர்பான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் இதற்காக கோவையொன்று நிர்வாகப் பிரிவினால் பேணப்படுகின்றது | நிறுவகச் சட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்படல் வேண்டும். |
| | | ii. | செலுத்த வேண்டிய நட்டஈடு அல்லது நட்டத்தின் அளவு தொடர்பான அறிவுறுத்தல் மற்றும் | தற்போது அனைத்து மாவட்டங்களிலும் கிளைகள் காணப்படுவதால் மருத்துவ | நிறுவகச் சட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகள் |

| | | | |
|---|---|---|---|
| | விடேச ஆசிரியர் அறிவுறுத்தல் வழங்குதல். | அதிகாரிகள் சபையொன்றை நியமித்தல் தேவைப்படமாட்டாது. | நிறைவேற்றப்படல் வேண்டும். |
| iii. | தொழிற்துறை சுகாதாரம் மற்றும் தொழிற்துறை விபத்துக்கள் தொடர்பான மருத்துவ அறிவுறுத்தல் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல். | தற்போது இலங்கை போக்குவரத்து சபையின் மூலம் சிகிச்சைகளை நாடிவரும் வாடிக்கையாளர்களின் தொழில்துறை சுகாதாரம் மற்றும் தொழில்துறை விபத்துக்களைத் தடுப்பது தொடர்பான மருத்துவ அறிவித்தல் மற்றும் பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. | நிறுவகச் சட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்படல் வேண்டும். |
| iv. | அனைத்து தகவல்களுக்கும் உரிய மோட்டார் வாகனம், உடல் ரீதியாகவோ அல்லது மனரீதியாகவோ தகுதியான நபர்கள் மற்றும் அனுபவமுடையவர்களால் மட்டுமே ஓட்டப்படுதல் அல்லது இயக்கப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு நிறுவனத்தினால் அல்லது பிற முகவர்களுடன் சரிபார்த்தல் மற்றும் குறிப்பிட்ட செயற்பாடுகள் அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட வேண்டியமை மற்றும் செயற்படுத்தப்படல், போக்குவரத்து மருத்துவ நடவடிக்கைகளில் நியமங்கள் | போக்குவரத்து மருத்துவ நடவடிக்கைகளில் நியமங்கள் மற்றும் அளவுகோல்கள் தயாரித்தலானது பல வருடங்களுக்கு முன்பே விசேட மருத்துவக் கல்லூரிகளுடன் கலந்துரையாடி தயாரிக்கப்பட்டுள்ளது. | நிறுவகச் சட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தயாரிக்கப்படல் மற்றும் எல்லைகளை அமைத்தல். | | |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br><br>9.12 ஆம் பிரிவு | பொதுத்திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாது மீளாய்வாண்டில் ரூபா 5,628,005 ஆன தொகையொன்று சுகாதார காப்புறுதி இழப்பீடொன்றைப் பெற்றுக் கொள்வதற்காகச் செலுத்தப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி 371(5) | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் முற்பணங்கள் நிதியாண்டில் திசெம்பர் 31 இல் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்த ரூபா 479,080 ஆன தீர்க்கப்படாத முற்பண மிகுதியொன்று காணப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 290,189,169 ஆன இலாபமாக இருந்ததுடன், அதற்கொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 451,929,472 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 161,740,303 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவிற்கு மருத்து சேவை வருமானம் ரூபா 168,587,470 ஆல் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களுக்கான போக்குப் பகுப்பாய்வு

- மீளாய்வாண்டில் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மருத்துவ நிறுவகத்தின் பிரதான வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள இலகுரக வாகனப் பரீட்சித்தல் வருமானம், கனரக வாகனப் புதுப்பித்தல் மருத்துவக் கட்டண வருமானம், ஆய்வகப் பரிசோதனை வருமானம் மற்றும் மருத்துவ முகாம் வருமானம் என்பன முறையே 20

சதவீதத்தால், 42 சதவீதத்தால், 49 சதவீதத்தால் மற்றும் 100 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

- நிறுவகத்தின் மருத்துவ விடுமுறைகளுக்காக செலுத்தப்பட்ட செலவுகள் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 இல் 48 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1997 இன் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து நிறுவகச் சட்டத்தின் பிரகாரம் போக்குவரத்து நிறுவகத்தினால் சாரதி அனுமதிப்பத்திரம் விண்ணப்பிப்பவர்களுக்கு உயரம், எடை, எக்ஸ்ரே பரிசோதனை, இரத்த சக்கரை மட்டம், இரத்தம் மற்றும் கண் பரிசோதனைகள் நடாத்தப்படுகின்ற போதிலும் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதற்குத் தேவையான நியமங்களைக் கண்டறிந்து மருத்துவ சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | அனைத்து பரிசோதனைகளுக்கும் நியமங்கள் மற்றும் அளவுகோல்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருப்ப துடன் அதன் மூலம் அனைத்துப் பிரிவுகளிலும் ஒரே முறைமையின் பிரகாரம் மருத்துவச் சான்றிதழ் வழங்குதல் மேற்கொள்ளப்படும். | சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவவதற்கு தேவையான நியம அளவு கோல்கள் இனங் காணப்பட்டு சான்றிதழ் வழங்கப்படு வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் பதவியணி 454 ஆக இருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஊழியர்களின் எண்ணிக்கை 317 ஆகும். அதன் பிரகாரம் 74 ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. அத்துடன் நிறுவகத்தின் நிரந்தர ஆட்சேர்ப்பிற்கு மேலதிகமாக ஒப்பந்தம், அமையம், நாளாந்த மற்றும் மணித்தியால அடிப்படையின் கீழ் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும் 2020 திசெம்பர் 31 இல் 61 மருத்துவர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. | நிறுவகத்தால் தற்போது மருத்துவ அதிகாரிகளுக்கான வெற்றிடங்கள் அதிகளவில் காணப்படுகின்றது. இதற்கான முக்கிய காரணம் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளம் மிகவும் குறைவாகும். | பதவியணி வெற்றிடங்களை விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நியதிச்சட்ட நிறுவகங்களின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை என்பன நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 இன் நிதிக்கூற்றுக்கள் 07 மாதங்கள் மற்றும் 04 நாட்கள் தாமதமாகி 2021 ஒக்தோபர் 04 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவகத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்குப் பொருத்தமான செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாடிக்கையாளர்களுக்கு செயற்திறனான மற்றும் திருப்திகரமான சேவையை வழங்கும் நோக்கத்தில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | நோக்கங்களுக்கு இணங்க செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |